**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 117/2022**

பெயர் :கோவிந்தன் (DW1) (Cross Continuation)

த/க/பெ. :

தேதி :02.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி பாதை கேட்டு வழக்கு போட்டுள்ளார். பட்டா கொடுப்பதற்கு முன்பு அந்த இடம் சர்க்கார் புறம் போக்காக இருந்தது என்றால் 6 பேருக்கு பட்டா கொடுக்கபட்டடது. ஒவ்வொருவருக்கும் 1 ஏர்ஸ் பட்டா கொடுத்ததுள்ளார்கள். மொத்த விஸ்தீரணம் 89 ஏர்ஸ். பட்டாவுடன் வரைபடம் எனக்கு கொடுக்கவில்லை. 2008 முதல் 2011 க்குள் பட்டா கொடுத்துள்ளார்கள். வருடம் நினைவில்லை. வாதி என் ஆவணங்கள் போட்டுள்ளார் என்பது தெரியவில்லை. அவற்றை நான் பார்க்கவில்லை. மெயின் ரோட்டின் வடக்கே தாவா இடம் உள்ளது. பழைய சர்வே எண். 322/1. உட்பிரிவு 327/6 எனக்கு பட்டா கொடுக்கப்பட்டது. அந்த ஆவணத்தை நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். இந்த வழக்கில் என்னையும் 1, 2 பிரதிவாதிகளையும் தான் பார்ட்டியாக சேர்த்துள்ளார்கள் வேறு யாரும் இல்லை. அரசு அதிகாரிகளை சேர்த்துள்ளார்கள் என்றால் இல்லை. அனைவரும் ஒரே நாளில் தான் பட்டா கொடுத்தார்கள். 2 ம் பிரதிவாதிகக்கு மேற்கே உள்ளதை முதல் பிரதிவாதி கிரயம் வாங்கி உள்ளார். 327/4 உட்பிரிவு. ராஜலெட்சுமி இடத்தின் தென் வட, கீழ் மேல் அளவு 10 க்கு 10. என் மகன் வெங்கடேசன் பெபயரில் கொடுக்கப்பட்ட பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். ராஜலெட்சுமி கிரயம் பெற்ற இடத்தின் 3 செண்ட் இடத்தை ரேவதி கிரயம் வாங்கியதாக எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். என்னுடைய எதிர் வழக்குரை பாரா 11 ல் ராஜலெட்சுமியிடம் ரேவதி 16 2/3 செண்ட் கிரயம் பெற்று அதில் 3 செண்டிற்கு ரேவதி பெயரில் பட்டா வாங்கப்பட்டதாக சொல்லி உள்ளேன். அதன் சர்வே எண் 327/5 என்று சொல்லி உள்ளேன். ஆனால் 327/5 மஞ்சமாதா விற்கு பி.வா சா.ஆ. 5 பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்த நிலத்தில் இடைவெளி விட்டுதான் 5 நபர்களுக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 327 /5 க்கும் 327/9 க்கும் இடையில் 20 அடிக்குமேலாக இடம் விட்ட பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால்

சரிதான். 327/4 வெங்கடேசனுக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என் மகனுக்கும் மகளுக்கு தலா ஒரு பட்டா கொடுத்துள்ளார்கள். மற்ற நபர்களுக்கு பட்டா கொடுத்த விபரம்எனக்கு தெரியாது என்றாலும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். பட்டா கொடுத்ததற்கு சர்காரில் வரைபடம் இருக்கும் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் இருக்கலாம். எங்களுக்கு பட்டா கொடுத்த இடங்களுக்கு இடையே உள்ள இடைவெளி பகுதியில் வாதி அவரின் கொல்லைகக்கு செல்கிறார் என்றால் சரியல்ல. என் பட்டா இடத்தை வாதி சொந்ததரவு செய்யவில்லை பாதை கேட்டுதான் வாதி வழக்கு போட்டுள்ளார் என்றால் வழக்கறிஞர்ஆணையரை நியமனம் செய்தால் தான் தெரியும்.